Private
E-Sevai
Center
CSC Center
STAR RAINBOW
SERVICES
VADAPALANI
8144337349

# ஹலோ மிரர் மெட்ராஸ்

hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்

உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 2 | சென்னை | தினசரி | 4 பக்கம் | சனிக்கிழமை, டிசம்பர் 24, 2022 | 4 பக்கங்கள் | ரூ.2/- | இதழ் 163

# தமிழகத்தில் 8 மாவட்டங்களில் நாளை கனமழை



சென்னை, டிசம்பர் 24 2022: தமிழகத்தில் 8 மாவட்டங்களில் நாளை கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:--

தென்மேற்கு வங்க கடல் பகுதிகளில் நிலவும் காற்றழுத்த தாழ்வு மண்டலம் (24-ந் தேதி) காலை 5:30 மணி அளவில் நாகப்பட்டினத்திலிருந்து சுமார் 510 கிலோமீட்டர் கிழக்கே நிலைகொண்டுள்ளது. இது அடுத்த 48 மணி நேரத்தில் மேற்கு-தென்மேற்கு திசையில் மெதுவாக இலங்கை வழியாக குமரிக்கடல் பகுதிகளை நோக்கி நகரக் கூடும்.

இதன் காரணமாக, இன்று (24ஙீந் தேதி) தமிழக கடலோர மாவட்டங்கள் புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களிலும், உள் தமிழக மாவட்டங்களில் ஒரிரு இடங்களிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

நாளை (25-ந் தேதி) தமிழக கடலோர மாவட்டங்கள் புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அநேக இடங்களிலும், உள் தமிழக மாவட்டங்களில் ஒரிரு இடங்களிலும் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். தூத்துக்குடி, ராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது.

26-ந் தேதி தென் தமிழக மாவட்டங்களில் அநேக இடங்களிலும், வட தமிழக மாவட்டங்கள் புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களிலும் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். கன்னியாகுமரி, திருநெல்வேலி தூத்துக்குடி, இராமநாதபுரம், தேனி, தென்காசி, விருதுநகர், சிவகங்கை, புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது.

27-ந் தேதி தமிழ்நாடு, புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

மீனவர்களுக்கான எச்சரிக்கை

24 மற்றும் 25-ந் தேதி தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய இலங்கை கடலோரப்பகுதிகள், தமிழக கடலோரப் பகுதிகள், குமரிக்கடல் பகுதிகள் மற்றும் மன்னார் வளைகுடா பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 45 முதல் 55 கிலோ மீட்டர் வேகத்தில் இடையிடையே 65 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும்.

26-ந் தேதி தமிழக கடலோரப் பகுதிகள், குமரிக்கடல் பகுதிகள் மற்றும் மன்னார் வளைகுடா பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில் இடையிடையே 60 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும். மேற்குறிப்பிட்ட நாட்களில் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாமென்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருப்பதி ஏழுமலையான் கோவிலில் மீண்டும் கொரோனா கட்டுப்பாடு



சென்னை, டிசம்பர் 24 2022: திருப்பதி ஏழுமலையான் கோவிலில் மீண்டும் கொரோனா கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது.

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் கடந்த 2020-ம் ஆண்டு கொரோனா தொற்று பரவல் காரணமாக நடை அடைக்கப்பட்டு பக்தர்கள் தரிசனம் ரத்து செய்யப்பட்டது.

தொற்று பரவல் குறைந்ததை அடுத்து குறைந்த அளவு பக்தர்கள் தரிசனத்திற்கு அனுமதிக்கப்பட்டனர். மீண்டும் கொரோனா 2-வது அலை தொடங்கியதால் பக்தர்களுக்கு பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டது.

பக்தர்கள் கொரோனா விதிமுறைகளை பின்பற்றி தரிசனம் செய்து வந்தனர். கடந்த ஒரு ஆண்டாக கொரோனா பரவல் குறைந்ததையடுத்து கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டு, இலவச தரிசனம், ரூ.300 ஆன்லைன் டிக்கெட் மற்றும் ஸ்ரீவாணி அறக்கட்டளை, சுப்ரபாத சேவை உள்ளிட்ட சேவைகள் மூலம் தினமும் 60 ஆயிரம் முதல் 80 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் தரிசனம் செய்து வருகின்றனர்.

எப்போதும் இல்லாத அளவுக்கு திருப்பதி தேவஸ்தானத்திற்கு மாதத்திற்கு ரூ.120 கோடி முதல் 130 கோடி வரை வருவாய் கிடைக்கிறது.

இந்த நிலையில் வெளிநாடுகளில் புதிய வகை கொரோனா தொற்று வேகமாக பரவி வருகிறது. தொற்றிலிருந்து மக்கள் தங்களை பாதுகாக்க கொரோனா விதிமுறைகளை கடைபிடிக்க வேண்டும் என சுகாதாரத்துறை அறிவித்துள்ளது.

இதனால் திருப்பதியில் ஏழுமலையானை தரிசனம் செய்ய வரும் பக்தர்கள் கட்டாயம் முகக்கவசம் அணிய வேண்டும். கிருமி நாசினி வைத்திருக்க வேண்டும்.

மேலும் தரிசனத்திற்கு வரும் பக்தர்கள் இரண்டு தவணை கொரோனா தடுப்பூசி செலுத்திய சான்று வைத்திருக்க வேண்டும் அல்லது தரிசனத்திற்கு 48 மணி நேரத்திற்கு முன்பு எடுத்த கொரோனா பரிசோதனை நெகட்டிவ் சான்றிதழ் கொண்டு வந்தால் மட்டுமே தரிசனத்திற்கு அனுமதிக்கப்படுவார்கள் என திருப்பதி தேவஸ்தானம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சீனாவில் ஒரே நாளில் 3.7 கோடி பேர் கொரோனாவால் பாதிப்பு

# சீனாவிலிருந்து இந்தியா வருவோருக்கு கொரோனா பரிசோதனை கட்டாயம்

சென்னை, டிசம்பர் 24 2022: சீனாவில் ஒரே நாளில் சுமார் 3.7 கோடி பேருக்கு கொரோனா தொற்று பாதிப்பு ஏற்பட்டுள்ளது. சீனாவிலிருந்து இந்தியா வருவோருக்கு கொரோனா பரிசோதனை கட்டாயம் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

சீன அரசாங்கத்தின் தேசிய சுகாதார ஆணையத்தின் கணிப்பின்படி, இந்த வாரத்தின் ஒரே நாளில் சீனாவில் சுமார் 3.7 கோடி பேர் தொற்றால் பாதிக்கப்பட்டிருக்கலாம், இது உலகின் மிகப்பெரிய பாதிப்பு எண்ணிக்கையாகவும், டிசம்பர் முதல் 20 நாட்களில் 24 கோடியே 80 லட்சம் பேர் அல்லது சுமார் 18 சதவீதம் பேர் தொற்றால் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்றும் தெரிவித்துள்ளது.

அதிலும், சீனாவின் தென்மேற்கில் உள்ள கிச்சுவான் மாகாணம் மற்றும் தலைநகர் பெய்ஜிங்கில் வசிப்பவர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. தொற்று பாதிப்பால் எத்தனை பேர் இறந்துள்ளனர் என்பது குறித்த தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. பெய்ஜிங் மற்றும் ஷாங்காய் உள்ளிட்ட முக்கிய சீன நகரங்களில் உள்ள மருத்துவமனைகள் தொற்று நோயாளிகளின் திடீர் அதிகரிப்பால் கூட்டம் நிறைந்து காணப்படுகிறது.

பெய்ஜிங்கில் தொற்று பாதிப்பு விகிதம் குறைந்து வருவதால் பிற பகுதிகளில் கடுமையான தொற்று அதிகரிக்கத் தொடங்கியிருப்பதாக தெரிவித்துள்ள அதிகாரிகள், இந்த தொற்று பரவல் நகர்ப்புறங்களில் இருந்து கிராமப்புறங்களுக்கு பரவுவதாகவும், அங்கு பெரும்பாலும் மருத்துவ வசதிகள் குறைவாக உள்ளதால், வரவிருக்கும் கடுமையான தொற்று பரவலை சந்திப்பதற்கு தயாராகுமாறு ஒவ்வொரு பிராந்தியத்திற்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சீனாவில் தொற்று பாதிப்பு அதிகரித்து வருவதை அடுத்து இந்தியா உள்ளிட்ட நாடுகளில் கொரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சீனாவிலிருந்து வருவோருக்கு கொரோனா பரிசோதனை கட்டாயம் என்று மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

சீனா, ஜப்பான், தென்கொரியா, தாய்லாந்து, ஹாங்காங் ஆகிய ஐந்து நாடுகளில் இருந்து வருவோருக்கும் கொரோனா பரிசோதனை கட்டாயம் நடத்தப்படும்.

புதிய வகை கொரோனா வைரஸ் பாதிப்பு பரவாமல் தடுக்கும் விதமாக மத்திய சுகாதாரத்துறை இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

சீனா உள்ளிட்ட 5 நாடுகளில் இருந்து வருவோருக்கு கொரோனா அறிகுறி அல்லது கொரோனா உறுதியாகும்பட்சத்தில் அவர்கள் தனிமைப்படுத்தப்படுவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டுப் பயணிகளில் 2 சதவீதம் பேருக்கு ரேண்டமாக பரிசோதனை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்ட நிலையில், வெளிநாடுகளில் கொரோனா பரவல் அதிகரிக்கும் நிலையில் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

வெளிநாட்டு பயணிகள் ஆர்.டி.பி.சி.ஆர் பரிசோதனையை கட்டாயம் செய்து கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.



இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்
ALL ONLINE SERVICES

"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# தலைவர் - வாத்வானி தொழில்முனைவோராக மீத்துல் படேல் நியமனம் செய்யப்படுவதை அறிவிக்கும் வாத்வானி ஃபவுண்டேஷன்



கோயம்புத்தூர், டிசம்பர் 24 2022: மீத்துல் பட்டேல் அவர்களை தலைவர் - வாத்வானி தொழில்முனைவோர் என்ற முக்கிய பொறுப்பில் நியமனம் செய்திருப்பதை வாத்வானி ஃபவுண்டேஷன் இன்று அறிவித்திருக்கிறது. தொழில்முனைவுக்கான சூழல் அமைப்புகளை உருவாக்குவது மற்றும் சிறு தொழில்நிறுவனங்களின் வளர்ச்சியை முடுக்கிவிட்டு விரைவாக்குவது மீது சிறப்பு கவனம் செலுத்தும் வாத்வானி ஃபவுண்டேஷனின் முனைப்புத்திட்டங்களை மீத்துல் பட்டேல் தலைமையேற்று வழிநடத்துவார். ஆசியா, ஆப்ரிக்கா மற்றும் இலத்தீன் அமெரிக்கா ஆகிய கண்டங்களில் உலகளாவிய தனது செயல்பரப்பை வளர்த்து விரிவாக்க வேண்டுமென்ற இந்த ஃபவுண்டேஷனின் குறிக்கோளை செயல்படுத்தும் ஒரு முயற்சியாக இந்த முக்கிய நியமனம் செய்யப்பட்டிருக்கிறது. உயர்தரமான பணிகளை உருவாக்குவது மற்றும் இலட்சக்கணக்கான மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவது என்ற இந்த ஃபவுண்டேஷனின் குறிக்கோளை அடைவதற்கான செயல்திட்டங்களை மேலும் வலுப்படுத்துவதும், தரம் உயர்த்தி விரிவுபடுத்துவதும் இந்நியமனத்தின் அடிப்படை நோக்கமாகும். மீத்துல், இதற்கு முன்பு கடைசியாக உத்திவாய்ந்த முக்கிய வளர்ச்சிப் பிரிவின் மைக்ரோசாஃப்ட் இந்தியா நிறுவனத்தின் தலைவராக பணியாற்றியவர்; முக்கியமான கூட்டாண்மைகளை உருவாக்குவதும், இதுவரை எட்டப்படாத சந்தைகளுக்கு தொழில்நுட்பத்தின் ஆதாயங்களை எடுத்துச் செல்வதற்காக புதிய தளங்களை உருவாக்குவதும் இவரது பணி பொறுப்பாக இருந்தது. இந்த பணிக்கு முன்னதாக மைக்ரோசாஃப்ட் இந்தியாவின் தலைமை இயக்க அதிகாரியாக பணியாற்றிய இவர், மைக்ரோசாஃப்ட் இந்தியாவின் துணை நிறுவனத்தின் பிசினஸ் மற்றும் புராடக்ட் திட்டமிடல், சந்தையாக்குதல் மற்றும் விற்பனை செயல்பாடுகள் ஆகியவற்றிற்கு பொறுப்புடையவராக செயலாற்றினார். மைக்ரோசாஃப்ட் வழங்கும் திட்டங்கள் மற்றும் தயாரிப்புகளை பெருநிறுவனங்கள், பொதுத்துறை நிறுவனங்கள், சிறு பிசினஸ் நிறுவனங்கள், நுகர்வோர்கள் மற்றும் பார்ட்னர் பிரிவுகள் என அனைத்திலும் வளர்ச்சியினை உறுதி செய்வதற்கு செயல்உத்திகளை வகுப்பது, முதலீடுகளை நிர்வகிப்பது மற்றும் நிறுவனத்தின் செயல்பாடுகளை முடுக்கிவிடுவதற்கு பொறுப்பானவராக இருந்தார். வாத்வானி ஃபவுண்டேஷனில், தலைவர் - வாத்வானி தொழில்முனைவோர் என்ற பொறுப்பில் இதில் இணைவது குறித்து தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்திய அவர் கூறியதாவது: "மாணவர்களிடம் தொழில்முனைவு திறனுக்கான பேரார்வத்தை உருவாக்குவதற்கு தேவைப்படும் ஆதாரங்களுக்கான அணுகுவசதியை ஜனநாயகப்படுத்துவது, புதிய தொழில்முனைவு திட்டங்களை உருவாக்கும் பயணத்தில் தொழில்முனைவோர்களுக்கு உதவுவது, ஏற்கனவே நிலைநாட்டப்பட்டு இயங்கி வரும் சிறு தொழில் நிறுவனங்களின் முயற்சிகளில் வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்காக ஆதரவளிப்பது ஆகிய நோக்கங்களுக்காக செயலாற்றி வரும் வாத்வானி ஃபவுண்டேஷன் குழுவுடன் இணைந்து பணியாற்றுவது குறித்து நான் உற்சாகமும், கிளர்ச்சியும் கொண்டிருக்கிறேன். இவர்களின் ஒட்டுமொத்த கூட்டு வெற்றியின் வழியாக விளிம்புநிலையில் வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கும் இலட்சக்கணக்கான மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த உதவுவதற்குத் தேவைப்படும் வேலைவாய்ப்புகளை உருவாக்குவது எமது நோக்கமாக இருக்கும்."

# 120 கிலோ எடையுள்ள 32 வயதுடைய ஆணுக்கு, ஃபோர்டிஸ் மலர் மருத்துவமனையில் சிறுதுளை செயல்முறை சிகிச்சை மூலம் மருத்துவ வரலாற்றில் மிகப்பெரிய இதயக் கட்டியை வெற்றிகரமாக அறுவை சிகிச்சை செய்து அகற்றப்பட்டது

சென்னை, டிசம்பர் 24 2022: சென்னை ஃபோர்டிஸ் மலர் மருத்துவமனையில் சவாலான மற்றும் மருத்துவ வரலாற்றில் அரிதான மற்றும் பெரிதான இதயக் கட்டி அறுவை சிகிச்சை செய்து 32 வயது, மிகவும் பருமனான, இளைஞருக்கு இரண்டாவது வாழ்க்கை வாய்ப்பைத் தந்துள்ளனர். ஃபோர்டிஸ் மலரின் இதய நோய் அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் தேஜஸ்வி என் மார்லா தலைமையிலான புகழ்பெற்ற மருத்துவர்கள் குழு வழக்கமான இதய அறுவை சிகிச்சைக்கு பதிலாக சிறுதுளை இதய அறுவை சிகிச்சை மூலம் இந்த சவாலான சிகிச்சையில் வெற்றிகொண்டு இந்த இளைஞருக்கு மறுவாழ்வு அளித்துள்ளனர். மூச்சுத் திணறல் மற்றும் அடிக்கடி மயக்கம் போன்ற அறிகுறிகளுடன் ஒரு இளம் இதய நோயாளி ஃபோர்டிஸ் மலர் மருத்துவமனையை அணுகினார். நோயறிதல் ஆய்வுக்குப் பிறகு, டாக்டர் ஜி மனோகர், மூத்த இருதயநோய் நிபுணர், நோயாளியின் வலது ஏட்ரியத்தில் உள்ள மிகப் பெரிய இதயக் கட்டியின் காரணமாக அறிகுறிகள் ஏற்பட்டதாகக் கண்டறிந்தார். 11.5ஜ்8 செமீ அளவுள்ள பெரிய கட்டி வலது ஏட்ரியத்தை முழுவதுமாக ஆக்கிரமித்து வலது வென்ட்ரிக்கிளுக்கான இரத்த ஓட்டத்தை முற்றிலும் தடுத்துக்கொண்டிருந்தது. ஃபோர்டிஸ் மலரில் உள்ள மருத்துவ நிபுணர்கள் சரியான நேரத்தில் கட்டியைக் கண்டறிந்து, சிறுதுளை இதய அறுவை சிகிச்சை முறையில் இதயக் கட்டியை அகற்றி இதய அறையை புனரமைப்பு செய்தனர். இதயத் திசுக்கள் புற்றுநோய்க்கு மிகவும் எதிர்ப்புத் திறன் கொண்டவை என்பதால் இதயக் கட்டிகள் அரிதான நிகழ்வுகளாகும். அகற்றப்படாத இதயக் கட்டி இரத்த ஓட்டத்தை முழுமையாகத் தடுக்கும் வாய்ப்புள்ளதால் அவை உயிருக்கு ஆபத்தானவையாக கருதப்படுகிறது..

இதய நோய் அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் தேஜஸ்வி என் மார்லா, ஃபோர்டிஸ் மலர் இந்த சிகிச்சையைப் பற்றி விரிவாகப் பேசுகையில், "இது மருத்துவ வரலாற்றில் சிறுதுளை இதய அறுவை சிகிச்சை செயல்முறை மூலம் அகற்றப்பட்ட மிகப்பெரிய இதயக் கட்டியாகும். எக்கோ கார்டியோகிராம் மற்றும் கணினிமயமாக்கப்பட்ட டோமோகிராபி இமேஜிங் செய்த பிறகு, 120 கிலோ எடையுள்ள ஆண் நோயாளிக்கு வலது ஏட்ரியத்தில் கட்டி இருப்பது கண்டறியப்பட்டது. இந்தக் கட்டி வலது வென்ட்ரிக்கிளுக்கு போகும் இரத்த ஓட்டத்தைத் தடுத்துக் கொண்டிருந்தது. கட்டிகள் பொதுவாக இதயத்தில் வருவது அரிதானது ஆகும். இந்த கட்டி நுரையீரல் தமணிக்கான இரத்த ஓட்டத்தை தடுத்திருந்தால் உடனடியாக மரணத்திற்கு வழிவகுத்திருக்கும்.

"ஏட்ரியம் போதுமான அறை இடைவெளியுடன் சரியாக புனரமைக்கப்படாவிட்டால் அறுவை சிகிச்சை முழுமையடையாது. நோயாளி அதிக பருமனாக இருந்ததால் சிகிச்சையளிப்பது சற்று சவாலாக இருந்தது. வழக்கமான இதய அறுவை சிகிச்சை முறை நோயாளியை மூன்று மாதங்களுக்கு படுக்கையில் இருக்க வைத்துவிடும். நோயாளியின் பாதுகாப்பு, கார்டியோபுல்மோனரி பைபாஸ் மூலம் சரியான இரத்த ஓட்டத்தை ஏற்படுத்துதல் மற்றும் ஹைபோவென்டிலேஷனின் மயக்க மருந்து ஆபத்து போன்ற மருத்துவ நுட்ப சவால்களை முறியடித்து, இதய மயக்கவியல் நிபுணர்களான டாக்டர் அஜீதா பி.கே மற்றும் டாக்டர் நவீன் குமார் டி ஆகியோரைக் கொண்ட எங்கள் நிபுணர் குழு வெற்றிகரமாக கட்டியை அகற்றி இந்த இளைஞனுக்கு புதிய வாழ்க்கையை அளித்தது. முதல் பரிசீலனைக்குப் பிறகு, நோயாளியின் உடல்நிலை நன்றாக இருந்தது, மேலும் அவரது இதய செயல்பாடு சாதாரணமாக உள்ளது" என்கிறார் டாக்டர் தேஜஸ்வி என் மார்லா.

ஃபோர்டிஸ் மலரின் இயக்குநர் திரு. சந்திரசேகர் கூறுகையில், "ஒரு குடும்பத் தலைவனுக்கு இயல்பான வாழ்க்கையை வழங்கிய நிபுணர் குழுவை நான் வாழ்த்துகிறேன். அவரது இளம் வயது மற்றும் இதயக் கட்டியுடன் வாழ்வதில் சிரமம் ஆகியவற்றின் காரணத்தால் அறுவை சிகிச்சை அவசியமாகிறது. சரியான நேரத்தில் நோயைக் கண்டறிந்து சரியான சிகிச்சை முறையைத் தேர்ந்தெடுத்தது நோயாளிக்கு ஒரு புதிய வாழ்க்கையைப் பெற உதவியது. டாக்டர் தேஜஸ்வி என் மார்லா மற்றும் அவரது அறுவை சிகிச்சை நிபுணர்கள் குழு, தீவிர சிகிச்சை நிபுணர்கள், இருதய மயக்கவியல் நிபுணர்கள் மற்றும் செவிலியர்கள் நோயாளி விரைவில் குணமடைய உதவியதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம்"

# இந்தியாவில் லேண்ட் ரோவர் அறிமுகம் செய்யும் தனித்துவமான பயண அனுபவங்கள் - டிஃபென்டர் ஜர்னீஸ்

கோயம்புத்தூர், டிசம்பர் 24 2022: ஜேகுவார் லேண்ட் ரோவர் இந்தியா, இந்தியாவில் பிரத்யேகமான மற்றும் தனித்துவமான பயண அனுபவங்கள் - டிஃபென்டர் ஜர்னீஸ்களை அறிமுகப்படுத்தியுள்ளது. டிஃபென்டர் வாகனங்களில் இது ஒரு செல்ஃப்-டிரைவ், பல நாள், சாகசத் திட்டமாகும், இது இந்தியா முழுவதும் பல ஆர்வமுள்ள மற்றும் விரும்பப்படும் பயணத்திட்டங்களை உள்ளடக்கும். ஒவ்வொரு டிஃபென்டர் பயணத்திலும் ஆடம்பர தங்கும் மற்றும் விருந்தோம்பல், வாழ்க்கை முறை அனுபவங்கள், கலாச்சார அறிமுகங்கள் மற்றும் முழுமையான டிஃபென்டர் ஓட்டுநர் அனுபவத்தை அளிக்கும் ஆஃப்-ரோடு டிரெயில்கள் கொண்ட இந்தியாவின் மிகச் சிறந்த சில வழித்தடங்களில் ஓட்டுதல் ஆகியவை அடங்கும். ஒவ்வொரு பயணத்திலும் 5 டிஃபென்டர்கள் பணியமர்த்தப்படுவார்கள், இதனால் மிகவும் பிரத்தியேகமான மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட அனுபவத்தை வழங்க,



வெறும் 5 டிரைவ் ஸ்லாட்டுகளை வழங்குவார்கள்.

கொங்கன் எக்ஸ்பீரியன்ஸ் எனப்படும் முதல் டிஃபென்டர் பயணம் 16 ஜனவரி 2023 முதல் திட்டமிடப்பட்டுள்ளது.

ஜேகுவார் லேண்ட் ரோவர் இந்தியா நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர் திரு.ரோஹித் சூரி அவர்கள் "டிஃபெண்டர் வாடிக்கையாளர்கள் துடிப்பையும் சாகசத்தையும் விரும்புபவர்கள் ஆவர். டிஃபென்டர், அதன் முதன்மையான ஓட்டுநர் திறன்கள் மற்றும் வடிவமைப்புடன், நமது அழகான நாட்டின் கலாச்சார பன்முகத்தன்மையை ஆராய்வதற்கான ஒரு திட்டத்துடன் விவேகமான வாடிக்கையாளர்களை ஈடுபடுத்துவதற்கான சரியான வாய்ப்பை வழங்குகிறது; அது பிரமிக்க வைக்கும் கடலோரப் பகுதிகளாக இருந்தாலும் சரி, வெள்ளையடிக்கப்பட்டது போன்ற இமயமலைச் சிகரங்களாக இருந்தாலும் சரி, தார் நதியின் இடைக்கால குன்றுகளாக இருந்தாலும் சரி. ஒவ்வொரு பயணமும் ஒரு வாழ்நாள் முழுவதும் நினைவில் நிற்கும் பயணமாக இருக்கும்." என்று கூறினார்.

# அண்ணன் தங்கை பாசத்தை இளைஞர்களின் நட்பை மையப்படுத்தி உருவாகும் கும்பாரி

சென்னை, டிசம்பர் 24 2022: ராயல் என்டர்பிரைசஸ் சார்பில் குமாரதாஸ் தயாரிப்பில் உருவாகியுள்ள படம் 'கும்பாரி'. இளைஞர்களின் நட்பு மற்றும் அண்ணன் தங்கை பாசத்தை மையப்படுத்தி உருவாகியுள்ள இந்த படத்தை கெவின் ஜோசப் எழுதி இயக்கியுள்ளார்.

இந்த படத்தில் கதாநாயகர்களாக விஜய் விஷ்வா, நலீப் ஜியா நடிக்க, கதாநாயகியாக மஹானா சஞ்சீவி நடித்திருக்கிறார். மேலும் ஜான்விஜய், பருத்திவீரன் சரவணன், சாம்ஸ், மதுமிதா, செந்தி, காதல் சுகுமார் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.



சமீபத்தில் வெளியான இந்த படத்தின் முதல் பாடலான கும்பாரி பாடல் ரசிகர்களிடையே மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது

இந்த படத்தின் இறுதிக்கட்ட பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. பொங்கலுக்கு பிறகு படத்தை திரையிடும் விதமாக திட்டமிடப்பட்டுள்ளது. இதுகுறித்த அறிவிப்பு விரைவில் வெளியாக இருக்கிறது.

நடிகர்கள் விஜய் விஷ்வா, நலீம் ஜியா, மஹானா சஞ்சீவி, ஜான்விஜய், பருத்திவீரன் சரவணன், சாம்ஸ், மதுமிதா, செந்தி, காதல் சுகுமார் தொழில்நுட்ப குழுவினர் விபரம் தயாரிப்பாளர் ; குமாரதாஸ் இயக்குனர் கெவின் ஜோசப் இசை ஜெய்பிரகாஷ், ஜெய்சன், பிரித்வி படத்தொகுப்பு ; டி.எஸ்.ஜெய் ஒளிப்பதிவு ; பிரசாத் ஆறுமுகம் சண்டைப்பயிற்சி ; மிராக்கிள் மைக்கேல் நடனம் ; ராஜுமுருகன் பாடகர்கள் ; அந்தோணிதாசன், ஐஸ்வர்யா, சாய்சரண் பாடலாசிரியர்கள் ; வினோதன், அருண்பாரதி, சீர்காழி சிற்பி எபெக்ட் ; ராண்டி மிக்சிங் ; கிருஷ்ணமூர்த்தி மக்கள் தொடர்பு ; ரியாஸ் கே.அஹ்மத்

# தெருவோர மற்றும் உழைக்கும் குழந்தைகளுக்கான அருணோதயா மையத்திற்கு விடுமுறை கால பரிசுகளை வழங்கும் அமெரிக்க கடல்சார் படையினர்

சென்னை, டிசம்பர் 24 2022: அமெரிக்க கடல்சார் படையினரின் (யு.எஸ். மெரைன்ஸ்) "குழந்தைகளுக்கு விளையாட்டு பொம்மைகள்" திட்டத்தின் மூலம் சென்னையைச் சேர்ந்த தெருவோர மற்றும் உழைக்கும் குழந்தைகளுக்கான அருணோதயா மையத்திற்கு பொம்மைகள் பரிசளிக்கப்படுகின்றன. உதவி தேவைப்படும் குழந்தைகளின் வாழ்வில் விடுமுறை காலத்தின் போது ஒளியேற்றுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.



சென்னையில் உள்ள அமெரிக்கத் துணைத் தூதர் ஜூடித் ரேவின் அமெரிக்க கடல்சார் படையினருடன் இணைந்து சுமார் 50 குழந்தைகளுக்கு புதிய பொம்மைகள், பள்ளி உபகரணங்கள், விளையாட்டு பொருட்கள், ஆடைகள், மற்றும் புத்தகங்களை வழங்கினார்.

அமெரிக்க கடல்சார் படையினரின் முயற்சிகளுக்கு பாராட்டு தெரிவித்த சென்னையில் உள்ள அமெரிக்கத் துணைத் தூதர் ஜூடித் ரேவின், ஒவ்வொரு குழந்தையும் கண்ணியத்தோடும், மகிழ்ச்சியோடும், அவர்களுக்கான அனைத்து உரிமைகளோடும் வளர்வதற்கு தேவையான சமுதாயத்தை உருவாக்குவதற்கான லட்சியத்தோடு இணைந்து பணியாற்றி வரும் அருணோதயா தெருவோர மற்றும் உழைக்கும் குழந்தைகளுக்கான மையத்தின் நிறுவனர் மற்றும் குழந்தை உரிமை ஆர்வலர் டாக்டர் விர்ஜில் டி.சாமிக்கு நன்றி தெரிவித்தார்.


குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிக்கவும், துஷ்பிரயோகத்திற்கு ஆளான குழந்தை தொழிலாளர்கள் மற்றும் தெருவோரக் குழந்தைகளைப் பாதுகாக்கவும், அவர்களின் குடும்பங்களுக்கு ஆதரவளிக்கவும் அருணோதயா மையம் செயலாற்றி வருகிறது.

"குழந்தைகளுக்கு விளையாட்டு பொம்மைகள்" திட்டம் குறித்து அமெரிக்க கடல்சார் படை வீரர் ஒருவர் கூறுகையில், "நாம் வாழும் சமூகத்திற்கு பங்காற்ற விடுமுறை காலம் வாய்ப்பளிக்கிறது. 'குழந்தைகளுக்கு விளையாட்டு பொம்மைகள்' திட்டத்தின் மூலம் சென்னையில் உள்ள குழந்தைகள் இடையே மகிழ்ச்சியைப் பரப்புவதற்கான வாய்ப்பைப் பெற்றதில் எனது சக வீரர்களும் நானும் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம்," என்றார். அமெரிக்க கடல்சார் படையின் குழந்தைகளுக்கு விளையாட்டு பொம்மைகள் திட்டத்தின் 75வது ஆண்டு நிறைவை 2022 கிறிஸ்துமஸ் விடுமுறை காலம் குறிக்கிறது, வாழ்க்கைக்கு நம்பிக்கை ஊட்டும் செய்தியை பரப்புவதை நோக்கமாகக் கொண்ட உலகளாவிய ஒரு முயற்சி இதுவாகும்.

# லெப்டினன்ட். கர்னல் புரோகித் - தி மேன் பீட்டோராய்டு நாட்டின் வரலாற்றில் முதன்முறையாக ராணுவ வீரர் பற்றிய- புலனாய்வு இதழ்

சென்னை, டிசம்பர் 24 2022: புலனாய்வு இதழியல் பற்றிய நீண்ட அறிக்கை வடிவில் புத்தகம் ஒரு சிறந்த உதாரணம் ஆகும், நிஜத்தில் நடந்த அனைத்து சம்பவங்களையும் பனிப்பாறையின் நுனி போல் இந்த புத்தகம் தொங்குகிறது, ஆனால் நிச்சயமாக புத்தகம் அனைத்து உண்மைகளையும் தேதிகளையும் ஒரு புத்தகத்தில் சுருக்கியுள்ளது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு மது பூர்ணிமா கிஷ்வர் வெளியிட்ட ஒரு கட்டுரை பெரும்பாலான தகவல்களைப் பதிவுசெய்தது, அதே நேரத்தில் இந்த புத்தகம் வாசகர்களுக்கான புதுப்பிக்கப்பட்ட திருத்தப்பட்ட தகவல்களை வடிவமைக்கப்பட்ட அத்தியாயங்களில் கொண்டிருந்தது. லெப்டினன்ட் பிரசாத் புரோஹித், பொதுக் களத்தில் இருந்து தேவையான தகவல்களைப் பெறுமாறு எழுத்தாளரிடம் கேட்டபோது, சில வகைப்படுத்தப்பட்ட தாவல்களில் பல்வேறு காரணங்களை முன்வைக்க ஆசிரியர் எதிர்கொள்ளும் கட்டுப்பாடுகளை வாசகர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

செப்டம்பர் 2008 மாலேகான் குண்டுவெடிப்பு தொடர்பாக நாட்டின் வரலாற்றில் முதல்முறையாக ராணுவ வீரர் லெப்டினன்ட் கர்னல் பிரசாத் ஸ்ரீகாந்த் புரோகித் கைது செய்யப்பட்டபோது, இது இந்து பயங்கரவாதம்!' என்று செய்தித்தாள் தலைப்புச் செய்திகள். இந்த நபர் யார், ஏன் அனைத்து செய்தித்தாள்களின் முதல் பக்கத்தில் அவரது பெயர் பூசப்பட்டது? எல்லா மக்களிலும் அவர் ஏன்? அவர் குற்றவாளியா? அவர் கட்டமைக்கப்பட்டாரா? அவர் ஒரு பலிகடா? இந்த அலங்கரிக்கப்பட்ட அதிகாரியின் குடும்பத்திற்கு என்ன நடந்தது? என்ற இந்த கேள்விகளுக்கு எல்லாம் லெப்டினன்ட். கர்னல் புரோகித் - தி மேன் பீட்டோராய்டு பதிலளிக்கும் முயற்சியிலும் மற்றும் புத்தகத்தில் ஒரு சதியை வெளிச்சத்திற்குக்




கொண்டுவருகிறது, அது ஒருவரால் நினைத்துக்கூட பார்க்கமுடியாதஅளவுக்கு நடுங்க வைக்கிறது... ஸ்மிதா மிஸ்ரா ஜி பலர் கண்களைத் திறக்கும் உண்மைகள் இந்த புத்தகத்தில் வைத்துள்ளார்

# சுந்தரம் ஃபைனான்ஸ் மற்றும் கேர் ஹெல்த் இன்சூரன்ஸ் கார்ப்பரேட் ஏஜென்சி ஒப்பந்தத்தில் நுழைகிறது

சென்னை, டிசம்பர் 24 2022: இந்தியாவில் மிகவும் மதிக்கப்படும் நிதிச் சேவைக் குழுக்களில் ஒன்றான சுந்தரம் ஃபைனான்ஸ் மற்றும் நாட்டின் முன்னணி சிறப்பு மருத்துவக் காப்பீட்டு நிறுவனங்களில் ஒன்றான கேர் ஹெல்த் இன்சூரன்ஸ் ஆகிய நிறுவனங்கள் இன்று கார்ப்பரேட் ஏஜென்சி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. இந்த நிகழ்ச்சியில் சுந்தரம் ஃபைனான்ஸ் நிர்வாக இயக்குநர் திரு.ராஜீவ் லோச்சன் மற்றும் கேர் ஹெல்த் இன்சூரன்ஸ் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி திரு. அனுஜ் குலாட்டி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தச் இணைவின் மூலம், சுந்தரம் ஃபைனான்ஸ் நிறுவனம், கேர் ஹெல்த் நிறுவனத்தின் சிறப்பான மற்றும் புதுமையான சுகாதாரக் காப்பீட்டுத் தீர்வுகளை தங்களது விசுவாசமான மற்றும் அதிகரித்து வரும் வாடிக்கையாளர்களுக்கு வழங்கும். சுந்தரம் ஃபைனான்ஸ் வாடிக்கையாளர்களின் சில்லறை மற்றும் குழு பிரிவுகளில் தயாரிப்புகள் வழங்கப்படுகின்றன. கூடுதலாக, தற்போது தொழில்நுட்பத்தால் இயக்கப்படும் மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட சலுகைகளின் கீழ் நிறுவனத்தின் தற்போதைய போர்ட்ஃபோலியோவுடன், இருப்பவர்களின் பல்வேறு காப்பீட்டுத் தேவைகளுக்கு ஒரே குடையின் கீழ் தீர்வுகளை வழங்கும்.

இந்த கூட்டாண்மை குறித்து கேர் ஹெல்த் இன்சூரன்ஸ் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி திரு. அனுஜ் குலாட்டி பேசுகையில், "இந்தியாவில் உள்ள மிகவும் நம்பகமான நிதிச் சேவைக் குழுக்களில் ஒன்றான சுந்தரம் ஃபைனான்ஸ் லிமிடெட் உடன் கூட்டு சேர்ந்து அவர்களின் வாடிக்கையாளர்களுக்கு விரிவான மற்றும் தரமான சேவையால் ஆதரிக்கப்படும் மருத்துவக் காப்பீட்டு திட்டங்களை வழங்குவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்" எனத் தெரிவித்தார்.

சுந்தரம் ஃபைனான்ஸ் நிர்வாக இயக்குநர் திரு ராஜீவ் லோச்சன் கூறுகையில், "நம் நாட்டில் உள்ள ஹெல்த் இன்சூரன்ஸ் நிறுவனங்களில் முன்னணியான கேர் ஹெல்த் இன்ஷூரன்ஸ் உடன் இணைந்து, இந்தியா முழுவதும் உள்ள எங்கள் வாடிக்கையாளர்களுக்கு புதுமையான ஹெல்த் இன்சூரன்ஸ் தயாரிப்புகளை வழங்குவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். நோய்த்தொற்று, காப்பீட்டுத் துறையில் ஒரு முன்னுதாரண மாற்றத்தைக் கொண்டு வந்துள்ளது மற்றும் இந்தியக் குடும்பங்களுக்கு மருத்துவக் காப்பீட்டுத் தீர்வுகள் அவசியமான விருப்பமாக மாறியுள்ளன. எங்கள் வாடிக்கையாளர்களின் ஆரோக்கியத்தை பாதுகாப்பதில் எங்கள் பங்கை செய்ய நாங்கள் ஆர்வமாக உள்ளோம்" எனத் தெரிவித்தார்.

# சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர், மா. சுப்பிரமணியன் வடபழனியில் உள்ள ஃபோர்டிஸ் மருத்துவமனையின் பல்துறை புதிய தீவிர சிகிச்சைப் பிரிவைத் தொடங்கிவைத்தார்



சென்னை, டிசம்பர் 24 2022: அனைத்து நோயாளிகளுக்கும் தரமான மருத்துவ சேவையை வழங்குவதற்கான தொடர் முயற்சியாக, வடபழனியில் உள்ள ஃபோர்டிஸ் மருத்துவமனையில் 17 படுக்கைகள் கொண்ட பல்துறை தீவிர சிகிச்சை பிரிவு இன்று திறந்து வைக்கப்பட்டது. இந்த புதிய வசதி மேம்பட்ட தொழில்நுட்பங்கள் மற்றும் 24 மணி நேர பல்துறை நிபுணர்களின் கண்காணிப்பில் செயல்படும். இது தீவிர சிகிச்சை நோயாளிகளுக்கு உயர்-நிலை தீவிர சிகிச்சையை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு தொடங்கப்பட்டுள்ளது. ஏற்கனவே மையத்தில் உள்ள 58 ஐசியூ படுக்கை கொண்ட பிரிவுகளுடன் இந்த புதிய ஐசியூ கூடுதல் பிரிவாக இருக்கும். மாண்புமிகு தமிழ்நாடு அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன் மேம்படுத்தப்பட்ட சுகாதார சேவைகளுக்கான வளர்ந்து வரும் தேவை மற்றும் அதற்கு ஆதரவாக அரசாங்கத்தின் பல்வேறு முயற்சிகள் பற்றிய தகவல்களை பகிர்ந்து கொண்டார். வடபழனி ஃபோர்டிஸ் மருத்துவமனையின் தலைவர் திரு. வெங்கட்டா ஃபணிதர் நெல்லூரி மற்றும் மூத்த மருத்துவப் பணியாளர்களும் தொடக்க விழாவில் கலந்து கொண்டனர். இதயநோய், எலும்பியல், நரம்பியல், நுரையீரல், இரைப்பைக் குடலியல் மற்றும் கல்லீரல் போன்ற பல்துறை நிபுணர்கள் தீவிர சிகிச்சை பிரிவில் எலும்பு மற்றும் மற்ற உறுப்புகள் சம்பந்தப்பட்ட சிக்கலான அறுவை சிகிச்சைக்கு உட்படுத்தப்படும் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்காக இருபத்தி நான்குமணி நேரமும் இருப்பர். வடபழனி ஃபோர்டிஸ் மருத்துவமனையின் தலைவர் திரு. வெங்கட்டா ஃபணிதர் நெல்லூரி மேலும் கூறுகையில், "புதிதாக கட்டப்பட்ட ஐசியூ, எங்களின் மேம்பட்ட சிகிச்சை வழங்குவதின் உறுதிப்பாட்டிற்கு ஒரு சான்றாகும். மருத்துவத் துறையின் முன்னேற்றம், வழங்கப்படும் நவீன சிகிச்சைகளுக்காக ஐசியூ படுக்கைகளுக்கான தேவை அதிகரித்துள்ளது. "உயிர்களைக் காப்பாற்றுதல் மற்றும் வளப்படுத்துதல்" என்ற எங்களின் குறிக்கோளுடன் சேவை செய்வது வடபழனி ஃபோர்டிஸ் மருத்துவமனையின் மீதுள்ள நோயாளிகளின் நம்பிக்கையை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது, இதன் விளைவாக அதிகமான நோயாளிகள் பல்வேறு சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சைகளுக்காக எங்களை அணுகுகிறார்கள். இந்த புதிய அதிநவீன ஐசியூ பிரிவு மூலம், அதிக நோயாளிகள் பயனடைவார்கள். எங்கள் சூப்பர் ஸ்பெஷலிஸ்ட் மருத்துவர் குழு அனைத்து நோயாளிகளுக்கும் 24 மணி நேரமும் சிறந்த சிகிச்சை அளிப்பர் என்று உறுதியாக நம்பலாம்."

# எல் & டி தமிழகத்தில் உள்ள 10 மாவட்டங்களில் 100-க்கும் மேற்பட்ட பள்ளிகளுக்கு ரூ.11 கோடியில் தொழில்நுட்ப உதவி!

சென்னை, டிசம்பர் 24 2022: லார்சன் & டூப்ரோ நிறுவனம் சார்பில் தொழில்நுட்பம், பொறியியல், உற்பத்தி, கட்டுமானம் மற்றும் சேவைகள் கட்டமைப்பு உள்ளிட்ட பிரிவுகளில், அந்நிறுவனத்தின் சமூக பொறுப்புணர்வு திட்டத்தின் மூலம் ரூ. 11 கோடியில் தமிழகத்தின் கல்வி தரத்தை உயர்த்தும் பணியில் ஈடுபட்டு வருகிறது. இதை உறுதிப்படுத்தும் வகையில், தமிழக முதல்வர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் டிசம்பர் 19 ம் தேதி "நம்ம பள்ளி" என்ற திட்டத்தை தொடங்கி வைக்கும் விழாவில் இத்திட்டத்தை தொடங்கி வைத்தார்

இந்த நிதியின் மூலம் தமிழகத்தில் உள்ள சென்னை, காஞ்சிபுரம், கோவை, சேலம், நாமக்கல், திருவள்ளூர், சிவகங்கை, நெல்லை, செங்கல்பட்டு, வேலூர் ஆகிய10 மாவட்டங்களில் உள்ள 100-க்கும் மேற்பட்ட அரசுப் பள்ளிகள் பயன்பெறும். இஞ்சினியரிங் பியூசர்ஸ் என்ற தலைப்பின் கீழ் இந்நிறுவனத்தின் சமூக பொறுப்புணர்வு திட்டத்தின் வாயிலாக இந்த நிதியானது நடப்பு நிதியாண்டில் ஸ்டெம் (அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், கணிதம்) எனப்படும் அறிவியல் சார் படிப்புகளை வழங்குவது உள்ளிட்ட அதை மேம்படுத்த மேற்கொள்ளப்படும் செயல்பாடுகளை ஊக்குவிக்கவும் உருவாக்கவும் உதவும். மேலும் மாணவர்களிடையே அறிவியல் மனப்பான்மையை உருவாக்கும் வகையில், ஸ்மார்ட் வகுப்பறைகள் அமைத்தல், ஏழை மாணவர்களுக்கான சமூகக் கல்வி மையங்களை நிர்வகித்தல், புதிய பள்ளி கட்டிடங்கள் கட்டுதல், பழைய கட்டிடங்களை புதுப்பித்தல், சுகாதார வளாகங்களை அமைத்தல், எழுதுமேஜை, பெஞ்சுகள் வழங்குதல், அரசுப்பள்ளிகளில் மழைநீர் சேகரிப்பு முறைகளை அறிமுகம் செய்தல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்படும். தமிழக அரசின் பள்ளிக்கல்வித்துறையுடன் இணைந்து மேற்கொள்ளப்படும் இந்த முன்முயற்சிகள் அனைத்தும் 2023 மார்ச் 31 க்குள் நிறைவேற்றப்படும்.

இது குறித்து இந்நிறுவனத்தின் செய்தி தொடர்பாளர் கூறுகையில், "நாங்கள் ஒருபுறம் தேசத்தின் உள்கட்டமைப்பை உருவாக்குகிறோம், மறுபுறம், எங்கள் நிறுவனத்தின் பல்வேறு சமூக பொறுப்புணர்வு திட்டத்தின் வாயிலாக, இந்தியாவின் சமூக உள்கட்டமைப்பு போன்றவற்றை உருவாக்குவதில் பொறுப்புணர்வுடன் கூடிய முன்முயற்சிகளை மேற்கொள்கிறோம், அதிலும் குறிப்பாக குழந்தைகள், கல்வி ஆகியவற்றின் மேம்பாட்டில் கவனம் செலுத்தி வருகிறோம்" என்றார். மேலும் அவர் கூறுகையில், "இந்த செயல்பாடுகளை தமிழக அரசுடன் இணைந்து மேற்கொள்வது எங்களுக்கு மிகவும் பெருமைக்குரிய ஒன்றாகும். மேலும் தமிழகத்தில் உள்ள அரசுப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கு உதவுவதற்கும், சிறப்பான இ□ந்தியாவை உருவாக்குவதில் எங்களது கணிசமான பங்களிப்பை அளிக்கவும் வாய்ப்பளித்த தமிழக அரசுக்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்" என்றார்.

குழந்தைகள், கல்வி தவிர, சுகாதாரம், குடிநீர், வடிகால், திறன் மேம்பாடு, பசுமையாக்கம் உள்ளிட்டவற்றிலும் கவனம் செலுத்தி சமூகத்தை வலிமையானதாக மாற்றும் முயற்சியில் எல் & டி நிறுவனம் ஈடுபட்டு வருகிறது. நிறுவனத்தின் ஒருங்கிணைந்த முயற்சிகளில் ஒன்றாக எல் & டி பொறியாளர்கள் அல்லது எல் & டி ஊழியர்கள் கொண்ட தன்னார்வலர்களை உருவாக்கி வாழ்வை மேம்படுத்தும் முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகிறது.

# 57% குறு,சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் புதிய வணிகத்தைப் பெறுவதில் சிரமத்தை அனுபவிக்கின்றனர், இது வணிக வளர்ச்சியைத் தடுக்கிறது

சென்னை, டிசம்பர் 24 2022: பாரதிய யுவ சக்தி டிரஸ்ட் ஒரு சமூக-பொருளாதார முன்முயற்சியாக நடத்திய அகில இந்திய ஆய்வு, இந்தியா முழுவதும் உள்ள சமூக ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் நலிவடைந்த தொழில்முனைவோருக்குச் சொந்தமான சுமார் 5,685 குறு நிறுவனங்களின் செயல்பாடு பற்றிய முக்கியமான நுண்ணறிவுகளை வழங்கியுள்ளது. இந்த வணிகங்களின் சராசரி முதலீடு ரூ.6 லட்சத்திற்கும் சற்று அதிகமாகவே பதிவு செய்யப்பட்டுள்ளது, இது அவர்களின் குறைந்த மூலதன அளவு, வரவிருக்கும் நெருக்கடி மற்றும் கோவிட்-19 இன் கடந்த இரண்டு ஆண்டுகளில் உள்ளூர் தேவை இடையூறுகள் உட்பட பல்வேறு காரணிகளால் பாதிக்கப்படக்கூடிய தன்மை ஆகியவற்றை எடுத்துக்காட்டுகிறது.

ஆர்வமுள்ள கிராமப்புற மற்றும் நகர்ப்புற தொழில்முனைவோருக்கு வழிகாட்டுதல் மற்றும் வங்கி நிதியுதவியை அமைக்கிற மற்றும் 12 மாநிலங்களில் உள்ள 20 நகரங்களை உள்ளடக்கிய பி ஒய் எஸ் டி ஆல் நடத்தப்பட்ட இந்த ஆய்வு, சந்தைகள் ஸ்திரமாக இருந்தாலும், அவற்றில் குறைந்தது ஐம்பத்தேழு சதவிகிதம் தங்கள் பொருட்களுக்கான புதிய ஆர்டர்களைப்பெற முடியாமல் திணறி வருகின்றதைக் காட்டுகின்றது

பாதிப்புக்குள்ளாகும் தொழில்முனைவோர் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்த சில முக்கிய மதிப்பீடுகளை மேற்கொள்வதற்காக, 5685க்கும் மேற்பட்ட சிறிய அளவிலான தொழில்முனைவோரின் மாதிரி அளவுடன், ஒப்பிடக்கூடிய அளவுகோல்களைப் பயன்படுத்தி இந்த ஆய்வு அக்டோபர் 2022 இல் நிறைவடைந்தது.

"கடந்த 27 மாதங்களில் தொழில்முனைவோர் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சனைகளில், நுகர்வோரின் குறைந்த வாங்கும் சக்தியின் விளைவாக

தேவை குறைதல், எரிபொருள் விலை உயர்வு மற்றும் அதிக போக்குவரத்து செலவு காரணமாக மூலப்பொருட்களின் விலை அதிகரிப்பதற்கு வழிவகுத்தல் ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தியாவின் பொருளாதார மதிப்புச் சங்கிலியில் அடித்தட்டு தொழில்முனைவோர் மற்றும் அவர்களது நிறுவனங்களை ஒருங்கிணைப்பதற்கான முக்கியத்துவத்தையும் அவசரத்தையும் இது எடுத்துக்காட்டுகிறது," என்று தனது ஆராய்ச்சிக் குழுவுடன் இணைந்து இந்த முயற்சியை வழிநடத்தும் " என்று பாரதியயுவா சக்தி டிரஸ்ட் இன் நிறுவனர் மற்றும் நிர்வாக அறங்காவலர் லட்சுமி வெங்கட்ராமன் வெங்கடேசன் கூறினார்.

ஃபரிதாபாத் மற்றும் குருகிராம் (ஹரியானா), சிகார் (ராஜஸ்தான்), உத்தம் சிங் நகர் (உத்தரகாண்ட்), ராயகடா, புவனேஷ்வர் மற்றும் ஜாஜ்பூர் (ஒடிசா), ராஞ்சி (ஜார்கண்ட்), சென்னை (தமிழ்நாடு), ஹைதராபாத் (தெலுங்கானா) ஆகிய இடங்களில் இருந்து 5,685 மாதிரி அளவு எடுக்கப்பட்டது. ), விஜயவாடா (ஆந்திரப் பிரதேசம்), புனே, ஔரங்காபாத், வார்தா, சதாரா, கராட், சாங்லி கோலாப்பூர் (மகாராஷ்டிரா), திப்ருகார் (அஸ்ஸாம்) மற்றும் புது தில்லி மாநிலம் ஆகியவற்றிலிருந்து இந்த 5,685 மாதிரி அளவு எடுக்கப்பட்டது.

வங்கிகள் கடனை வழங்கிய பிறகு இரண்டு ஆண்டுகளுக்கு ஒருவருக்கு ஒருவர் என்ற அடிப்படையில் பி ஒய் எஸ் டி தனது வழிகாட்டுதல் திட்டத்தில் பெருமிதம் கொள்கிறது, ஏனெனில் உதவி பெறும் தொழில்முனைவோரின் கடனில் 97% க்கும் அதிகமானோர் முறையாக திருப்பிச் செலுத்துகிறார்கள், 1.5% சிறிது தாமதத்துடன் திருப்பிச் செலுத்துகிறார்கள் மற்றும் இதே பிரிவில் 10%க்கும் அதிகமான தொழில்துறை சராசரிக்கு எதிராக வெறும் 1.5% என் பி ஏ மட்டுமே உள்ளது.

கோவிட்-19 இன் தாக்கம் மெதுவாக குறைந்து வரும் நிலையில், மெதுவான பொருளாதார மீட்சி, மற்றும் பிறவற்றில் புதிய உள்ளூர் விநியோக செயல்முறை சீர்குலைவுகள் உள்ளிட்ட பல காரணிகளால் பொருளாதார நிலை இன்னும் முழுமையாக நிலைபெறவில்லை. சுமார் 27% தொழில்முனைவோர் தங்கள் கடன் தவணைகளை சரியான நேரத்தில் திருப்பிச் செலுத்துவதில் சிரமப்படுவதாகக் கூறுகிறார்கள், மேலும் 20% பேர் உற்பத்திக்கான மூலப்பொருட்களை ஏற்பாடு செய்வதில் சிரமப்படுகிறார்கள். அவர்களில் குறைந்த பட்சம் 9% பேருக்கு உற்பத்திச் செலவு அதிகரித்திருப்பது கவலைக்குரிய காரியமாக வெளிப்பட்டுள்ளது.

மறுபுறம், ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்டதையடுத்து, தொழிலதிபர்கள் நடவடிக்கையில் இறங்கினர், தொற்றுநோய்க்கு முந்தைய கட்டத்துடன் ஒப்பிடுகையில் சில அம்சங்களில் சிறப்பாகச் செயல்படுவதாக, 53 சதவீதம் பேர் வணிக வளர்ச்சியில் நேர்மறையான உணர்வை எதிரொலித்துள்ளனர் என்று திருமதி வெங்கடேசன் எடுத்துரைத்தார்.

14 % பெண் தொழில்முனைவோர், அவர்கள் பெண்களாய் இருக்கிறபடியால் தங்கள் தொழிலை நடத்துவதில் சிரமப்படுகிறார்கள், அவர்களில் 72% பேர் தங்கள் பொருட்களை சந்தைப்படுத்துவதற்காகவும், 26% பேர் புத்தகக் கடன்களை சரியான நேரத்தில் செலுத்துவதற்காகவும் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

"பெண் தொழில்முனைவோருக்கு சிறப்பு வழிகாட்டுதல் மற்றும் திறன் மேம்பாடு தேவை. எதிர்பாராத நேரங்களில் இயங்க முடியாமை, பிற நகரங்களுக்கு பயணப்படுவது மற்றும் டிஜிட்டல் மார்க்கெட்டிங் கருவிகளைப் பயன்படுத்துவதில் திறமையின்மை ஆகியவை அவர்களின் வணிகத்தின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துகின்றன. வேலை மற்றும் வீட்டுப் பொறுப்புகளுக்கு இடையே உள்ள பதற்றம், சமூக வரம்புகள் மற்றும் பொதுவான சமூக ஆதரவின்மை போன்ற பாகுபாடு மற்றும் தடைகளை பெண்கள் எதிர்கொள்கின்றனர்." என்று அவர் கூறினார். தொற்றுநோய்களின் மிகப்பெரிய நேர்மறையான தாக்கம் விநியோக செயல்முறை நிர்வாகத்தின் டிஜிட்டல்மயமாக்கலாகும். சுமார் 40% தொழில்முனைவோர் டிஜிட்டல் தளங்களை முக்கியமாக ஃபேஸ்புக் மற்றும் வாட்ஸ்அப் மூலம் மூலப்பொருட்களை ஏற்பாடு செய்வதற்கும் தங்கள் தயாரிப்புகளை சந்தைப்படுத்துவதற்கும் பயன்படுத்தத் தொடங்கியதாகக் கூறினர். பாரம்பரிய விநியோக செயல்முறைகள் படிப்படியாக சீர்குலைந்து வருவதைக் குறிக்கிறது என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர், மேலும் சமூக ஊடகங்கள் மற்றும் பிற டிஜிட்டல் தளங்களின் உதவியுடன் புதிய விநியோக செயல்முறைகள் இணையாக, சுதந்திர சந்தையிடங்களாக உருவாகி வருகின்றன.

# ஓரியண்டல் ஈஸ்ட் இந்தியா, இந்தியாவில் புத்தம் புதிய, அதிநவீன ஈஸ்ட் உற்பத்தி ஆலையை உருவாக்க $900 மில்லியன் முதலீடு செய்கிறது

சென்னை, டிசம்பர் 24 2022: ஜப்பானில் ஈஸ்ட் தயாரிப்பில் உலகளாவிய முன்னணி நிறுவனமான ஓஒய்சி ஜப்பான் இன் துணை நிறுவனமான ஓரியண்டல் ஈஸ்ட் இந்தியா, இந்தியாவில் உலகளாவிய அளவிலான ஈஸ்ட் ஆலையை உருவாக்க □900 கோடி முதலீடு செய்து அதன் தடத்தை விரிவுபடுத்தியது. இந்த அதிநவீன உற்பத்தி நிலையம் அதன் செயல்பாடுகளின் முதல் கட்டத்தில் 33,000 மில்லியன் டன் புதிய ஈஸ்ட் உற்பத்தி அளவை நிறுவியுள்ளது. இந்த உற்பத்தித் தொழிற்சாலையானது, 200 நேரடி வேலைகளையும், மதிப்புச் சங்கிலியில் உள்ளூர் வழங்குநர்கள் மூலம் 800 மறைமுக வேலைகளையும் உருவாக்குவதன் மூலம் இப்பகுதியில் வேலைவாய்ப்பை அதிகரிக்கும்.

முக்கிய தூண்களில் ஒன்றாக நிலைத்தன்மையுடன் ஒரு பொறுப்பான அமைப்பாக, அதிநவீன வசதிகள் மிக உயர்ந்த உணவு பாதுகாப்பு, உலகளாவிய தரத்திற்கு கட்டமைக்கப்பட்டுள்ளன, பூஜ்ஜிய திரவ வெளியேற்ற நீர் சுத்திகரிப்பு வசதி இதனை இந்திய தொழில்துறைக்கு ஒரு அளவுகோலாக அமைக்கிறது. இந்தியாவிலும் சர்வதேச சந்தையிலும், பேக்கரிகள், டிஸ்டில்லரிகள் மற்றும் பிற உணவுத் தொழில்களுக்கு ஈஸ்ட் தயாரிப்புகளை வழங்குவதில் ஓரியண்டல் ஈஸ்ட் இந்தியா ஒரு முக்கிய பங்களிப்பாளராக உள்ளது.

ஈஸ்ட் மற்றும் ஈஸ்ட் மூலம் தயாரிக்கப்படும் பொருட்களுக்கான தேவை சென்னையில் எப்போதும் அதிகமாகவே இருந்து வருகிறது. இப்போது, பேக்கரி பொருட்களுக்கான அதிகரித்து வருவதால், பல பிரபலமான சங்கிலி நிறுவனங்களும் நகரத்திற்கு நகர்ந்து விற்பனை நிலையங்களைத் திறக்கவும், நகரத்தில் வளர்ந்து வரும் தேவையைப் பூர்த்தி செய்யவும் வந்துள்ளன. இது ஈஸ்ட் மற்றும் ஈஸ்டில் இருந்து தயாரிக்கப்படும் தயாரிப்புகளை மேலும் ஊக்குவிக்கிறது, இது நகரத்திற்கு எங்கள் வருகையை குறிப்பிடத்தக்கதாக ஆக்குகிறது.

ஓஒய்சி ஜப்பானின் தலைவரும், ஓரியண்டல் ஈஸ்ட் இந்தியாவின் தலைவருமான மசாஷி நககாவா கூறினார், "இந்தியா எங்கள் உலகளாவிய மூலோபாயத்தின் மூலக்கல்லாகும், மற்றும் ஓஒய்சி இன் நிலைப்பாட்டில் சந்தேகத்திற்கு இடமின்றி அதிக கவனம் செலுத்தும் சந்தைகளில் ஒன்றாகும். இந்த புதிய தொழிற்சாலை இந்தியாவுக்கான எங்களது அர்ப்பணிப்பின் சான்றாகவும், நமது உலகளாவிய விரிவாக்கத்தில் குறிப்பிடத்தக்க மைல்கல்லாகவும் உள்ளது. பெரிய உணவுச் சங்கிலிகள், உள்ளூர் பேக்கரிகள் மற்றும் பிற தொடர்புடைய வணிகங்களின் அதிகரித்து வரும் தேவையைப் பூர்த்தி செய்ய இந்த ஆலை அதிநவீன ஈஸ்ட் தயாரிப்புகள் மற்றும் சேவைகளை வழங்கும். இந்த ஆலை "மேக் இன் இந்தியா" உத்திக்கு ஏற்ப இந்தியாவில் ஈஸ்ட் இறக்குமதியைச் சார்ந்திருப்பதைக் குறைக்கும். எங்கள் கூட்டு வளர்ச்சியின் வெற்றியை உறுதி செய்வதற்காக, எங்கள் வாடிக்கையாளர்கள் மற்றும் பங்குதாரர்கள் அனைவருடனும் இணைந்து பணியாற்ற நாங்கள் எதிர்நோக்குகிறோம்."என்று கூறினார்.

ஓஒய்சியானது, ஜப்பானின் முதல் பேக்கரிகளின் ஈஸ்ட் உற்பத்தியாளராக 1929 இல் நிறுவப்பட்டது, அதன் பின்னர் பல்வேறு உணவுப் பொருட்கள், பேக்கரி பொருட்கள் மற்றும் பிற உயிரி தொழில்நுட்பம் சார்ந்த தயாரிப்புகளை வழங்குவதில் விரிவடைந்தது. பல ஆண்டுகளாக ஓஒய்சி ஜப்பானில் மிகப்பெரிய ஈஸ்ட் உற்பத்தி செய்யும் நிறுவனமாக மாறியுள்ளது. ஓஒய்சி ஆனது அதன் உயர்நிலை ஈஸ்ட் நொதித்தல் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதன் மூலம் அதிநவீன ஈஸ்ட் மற்றும் பேக்கிங் கூறு பொருட்களை உற்பத்தி செய்துள்ளது, மேலும் சிறந்த உயிர்வேதியியல் ஆராய்ச்சியில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குகிறது.

# சோசியல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ஐ, ஒரு தனித் துறையாக என் எஸ் ஈ நிறுவும்

சென்னை, டிசம்பர் 24 2022: நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ஆஃப் இந்தியா (என் எஸ் ஈ), டிசம்பர் 19, 2022 அன்று, என் எஸ் ஈ ன் தனிப் பிரிவாக சோசியல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ஐ அமைக்க, செக்யூரிட்டிஸ் எக்ஸ்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியா இடமிருந்து கொள்கை ரீதியான ஒப்புதலைப் பெற்றது. முன்னதாக, மாண்புமிகு நிதி அமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன், 2019-20 ஆம் ஆண்டுக்கான தனது மத்திய பட்ஜெட் உரையில், சமூக நல நோக்கத்திற்காக உழைக்கும் சமூக நிறுவனங்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களை செக்யூரிட்டிஸ் எக்ஸ்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியா இன் ஒழுங்குமுறை வரம்பிற்கு உட்பட்டு பட்டியலிடுவதற்காக, சோசியல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ஐ உருவாக்க முன்மொழிந்தார். அதனால் அவர்கள் மூலதனத்தை, ஈக்விட்டியாகவோ, கடனாகவோ அல்லது மியூச்சுவல் ஃபண்ட் போன்ற அலகுகளாகவோ திரட்ட முடியும்

1956 ஆம் ஆண்டின் பத்திர ஒப்பந்தங்கள் (ஒழுங்குமுறை) சட்டத்தின் கீழ், இந்திய அரசு "ஜீரோ கூப்பன் ஜீரோ பிரின்சிபல்" என்ற புதிய பாதுகாப்பை அரசிதழ் அறிவிப்பு மூலம் அறிவித்துள்ளது. இந்த புதிய பத்திரம் ஜீரோ கூப்பன் ஜீரோ பிரின்சிபல் ஆனது, என் எஸ் ஈ இன் சோசியல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் பிரிவில் பதிவு செய்தவுடன், தகுதிக்கான நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு உட்பட்டு, நிதி திரட்டுவதற்காக, லாபத்திற்காக அல்ல மூலம் பொது அல்லது தனிப்பட்ட முறையில் வழங்கப்படலாம். தற்போது, குறைந்தபட்ச வெளியீட்டு அளவு ரூ. 1 கோடியாகவும் மற்றும் சந்தாவிற்கான குறைந்தபட்ச விண்ணப்ப அளவு ரூ. 2 லட்சமாகவும் விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. ஜீரோ கூப்பன் ஜீரோ பிரின்சிபல் க்கான சந்தாவானது, ஒரு பரோபகார நன்கொடை போல இருக்கும்.

என் எஸ் ஈ இன் எம்டி & சிஇஓ திரு. ஆஷிஷ்குமார் சவுகான் " நாட்டிற்காக மூலதனத்தை உருவாக்குவதில் என்எஸ்இ எப்போதும் முக்கிய பங்கு

வகிக்கிறது. சோசியல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ஐ என் எஸ் ஈ யின் துணைப் பிரிவாக தொடங்குவதற்கு நாங்கள் பணியாற்றி வருகிறோம். நிலையான வளர்ச்சி இலக்குகளை ஆதரிக்கும் சமூக நிறுவனங்களுக்கு இந்த தளம் பெரிதும் பயனளிக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்." என்று கூறினார்.

# டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார் புதிய இன்னோவா ஹைக்ராஸ் காரை அறிமுகப்படுத்துகிறது




சென்னை, டிசம்பர் 24 2022: க்ரோமா அறிமுகப்படுத்தி இருக்கும் 'ஃபெஸ்டிவல் ஆஃப் ட்ரீம்ஸ்', புத்தாண்டு விற்பனைச் சலுகையுடன் உங்கள் ஆண்டை சிறப்பாக நிறைவு செய்யுங்கள். டாடா குழுமத்தின் அங்கமான க்ரோமா எலக்ட்ரானிக்ஸ் சில்லறை விற்பனையில் இந்தியாவின் முதல் மற்றும் நம்பகமான, பன்முக வழியில் (ஆம்னிசேனல்), செயல்பட்டு வரும் நிறுவனமாகும்.. க்ரோமா வாடிக்கையாளர்களின் ஷாப்பிங் கனவுகளை ஒரே தளத்தில் நனவாக்குகிறது. தற்போது க்ரோமா லேடாப்கள், மொபைல் போன்கள், வீட்டு உபயோகப் பொருட்கள், தொலைக்காட்சிகள் மற்றும் பல வகை சாதனங்கள், வாடிக்கையாளர்களால் அதிகம் விருப்பப்படும் கேஜெட்கள் மற்றும் உபகரணங்களின் மீது அட்டகாசமான சலுகைகளை வழங்குகிறது.. க்ரோமா விற்பனை நிலையங்களிலும், க்ரோமாவின் அதிகாரப்பூர்வமான இணையதளமான croma.com <http://croma.com> -லும் ஜனவரி 2, 2023 வரை இந்த மாபெரும் சலுகை விற்பனை நடைபெறுகிறது. விடுமுறை மற்றும் பண்டிகைக் காலத்தை சிறப்பாக்கும் வகையில் இந்தச் சலுகை வழங்கப்படுகிறது.

கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு என்பது மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் நிகழ்வுகளாக, மக்களால் அதிகம் கொண்டாடப்படும் விழாக்கள் ஆக முக்கியத்துவம் பெற்றிருக்கின்றன. 'சீக்ரெட் சாண்டா' விளையாடுவது முதல் அன்பானவர்களுக்கு அவர்கள் நீண்டகாலமாக வாங்க விரும்பும் பரிசுகளை வாங்குவது வரை பல கொண்டாட்டங்களைக் கொண்டது இந்தப் பண்டிகைகள். இதில் மதிப்புமிக்க வாடிக்கையாளர்களின் விடுமுறை ஆசைகள் அனைத்தும் நிறைவேறும் வகையில் க்ரோமா வழங்கும் அட்டகாசமான தள்ளுபடிகள் அமைந்துள்ளன. மேலும், க்ரோமா தள்ளுபடிச் சலுகைகளுக்கென பிரத்தியேகமான 3 விதமான பேண்ட்களை அறிமுகப்படுத்துகிறது. க்ரோமா வாடிக்கையாளர்கள் விற்பனை நிலையங்களில் சாதனங்களை வாங்கும்போது சிவப்பு பேண்ட் மீது 10 சதவீத தள்ளுபடியும் பச்சை பேண்ட்-டில் 5 சதவீதமும் மற்றும் வெள்ளை பேண்ட்-டில் 3 சதவீத தள்ளுபடியும் வழங்கப்படுகிறது. டிசம்பர் 24 முதல் டிசம்பர் 25 வரை மற்றும் டிசம்பர் 31 முதல் ஜனவரி 1, 2023 வரை இரண்டு கட்டங்களாக விற்பனை நிலையங்களில் மட்டுமே லக்கி டிரா பேண்ட்-களை மீட்டெடுக்க முடியும்.

க்ரோமா, இந்த ஆண்டின் நிறைவைக் கொண்டாடும் வகையில் ஏராளமான சலுகைகளை வழங்குகிறது. அன்பானவர்களுக்கு ஸ்மார்ட் ஃபோன் வாங்கிக் கொடுக்க அல்லது பரிசளிக்க விரும்புவோருக்கு, 5ஜி ஸ்மார்ட்போன்கள் ரூ. 12,999 என்ற விலையில் தொடங்குகிறது. அதோடு மட்டுமல்லாமல், தேர்ந்தெடுக்கப்பட்ட பிராண்டுகளுக்கு க்ரோமா, ரூ. 4,999 மதிப்பிலான ஸ்மார்ட் கடிகாரத்தை இலவசமாக வழங்குவதால் கூடுதல் சலுகையும் காத்திருக்கிறது. மேம்படுத்தப்பட்ட அனுபவத்தை எதிர்பார்க்கும் கேமிங் நபர்களுக்கு, 12-வது தலைமுறை இன்டெல்(ஆர்) கேமிங் லேப்டாப்கள் வெறும் 54,990 ரூபாயில் தொடங்குகின்றன. அதே சமயம் குறைந்த விலை லேப்டாப்பைத் தேடுபவர்களுக்கு இன்டெல் (ஆர்) கோர்(டிஎம்) ஐ3 ரூ. 34990 என்ற விலையில் தொடங்குகிறது.

குளிர்சாதனப் பெட்டிகள், வாஷிங் மெஷின்கள், ஸ்மார்ட்போன்கள், இயர்போன்கள், தொலைக்காட்சிகள், வீட்டு உபயோகப் பொருட்கள் மற்றும் பலவற்றை, நம்பமுடியாத தள்ளுபடி விலையில், சிறப்பாகத் தேர்வு செய்யப்பட்ட பண்டிகைக் காலச் சலுகைகள் மூலம் வாடிக்கையாளர்களுக்கு க்ரோமா வழங்குகிறது. இதன் மூலம் வாடிக்கையாளர்கள் தங்கள் வீடுகளை புதுப்பிக்கும் முயற்சிகளுக்கு ஆதரவுக்கரம் நீட்ட க்ரோமா தயாராக உள்ளது. 4கே யுஹெச்டி டிவிகள் வெறும் ரூ. 990 என்ற மாதாந்திர தவணைத் தொகை செலுத்தினால் போதும் என்ற அசத்தலான விலையில் தொடங்குகின்றன. எல்ஜி ஓஎல்இடி டிவிகள் மாதத்திற்கு வெறும் ரூ.2990 என்ற தவணைத் தொகை விலையில் தொடங்குகின்றன. முழு தானியங்கி வாஷிங் மெஷின்கள் ரூ. 20,990 என்ற விலையில் தொடங்குகின்றன. அத்துடன் 1.5-டன் 3 ஸ்டார் இன்வெர்ட்டர் ஸ்பிளிட் ஏசி வெறும் ரூ. 34,990 என்ற தொடக்க விலையில் கிடைக்கிறது. இவற்றின் மூலம் ஒரு முழுமையான வீட்டு உபயோக சாதனங்களின் ஷாப்பிங் அனுபவம் வாடிக்கையாளர்களுக்குக் காத்திருக்கிறது.

புத்தாண்டின் உற்சாகத்தைக் கொண்டாடும் வகையில், க்ரோமா தமது இணையதளத்தின் மூலம் வாங்கப்படும் ஏஎம்டி கேமிங் லேப்டாப்களுக்கு 40 சதவீதம் வரை தள்ளுபடியையும் மற்றும் ரூ. 5,000 வரை கேஷ்பேக் (பணம் திரும்பப் பெறுதல்) சலுகையையும் வழங்குகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட ஏஎம்டி ரைசன் லேப்டாப்களை வாங்கும் போது, 14,000 ரூபாய் வரை மதிப்புள்ள மானிட்டர்கள் மற்றும் கம்ப்யூட்டர் பயன்பாடுகளுக்கு உதவும் இதர கருவிகள் போன்ற பொருட்களை தங்களது தேவைக்கேற்ப இலவசங்களாக விற்பனை நிலையங்களில் வழங்கப்படுகின்றன.

வாடிக்கையாளர்களின் கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு விருந்துக் கொண்டாட்டங்களை மனதில் கொண்டு, க்ரோமா வெறும் ரூ. 2199 முதல் பார்ட்டி ஸ்பீக்கர்களை வழங்குகிறது. மேலும் சவுண்ட் பார்-களுக்கு 80 சதவீதம் வரை தள்ளுபடி வழங்கப்படுகிது. மொத்தத்தில், க்ரோமா தமது அனைத்து மதிப்புமிக்க வாடிக்கையாளர்களுக்கும் விடுமுறைக் காலம் மற்றும் ஆண்டு நிறைவை மறக்கமுடியாத ஒன்றாக மாற்ற அனைத்து முயற்சிகளையும் மிகச்சரியாக மேற்கொள்கிறது.

croma.com <http://croma.com> என்ற இணையதளத்தில் சிறந்த சலுகைகள் மற்றும் தள்ளுபடிகளைப் பார்த்துத் தெரிந்து கொள்ளவும். அல்லது அருகில் உள்ள விற்பனை நிலையத்துக்குச் சென்று ஆண்டு நிறைவு விற்பனை தொடர்பான சிறந்த சலுகைகள் பற்றித் தெரிந்து கொள்ளலாம்.

* அனைத்து சலுகைகளும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

# சென்னை போக்குவரத்து தலைமை காவலர் மணிவண்ணனுக்கு சேவை செம்மல் விருது




சென்னை, டிசம்பர் 24 2022: மக்கள் உரிமைகள் கழகம் சென்னை போக்குவரத்து தலைமை காவலர் மணிவண்ணனுக்கு அவரது சிறந்த சேவையினை பாராட்டி சேவை செம்மல் விருது வழங்கியது.

மதுரையை தலைமை இடமாகக் கொண்டு செயல்பட்டு வரும் மக்கள் உரிமைகள் கழகம் உலக மனித உரிமை தின விழாவை கொண்டாடியது. மக்கள் உரிமைகள் கழக நிறுவன தலைவர் டாக்டர் எஸ் பி சபரி ராஜ் தலைமையில் மாநில அவைத்தலைவர் வைகோ ஏ மாரிமுத்து மாநில பொருளாளர் ஜனாப் எம் சேக் செர்ஷா மாநில துணை பொருளாளர் ஆர் ரமேஷ் பாலகிருஷ்ணன் முன்னிலை வகித்தனர். மேனாள் மாவட்ட நீதிபதி மற்றும் மக்கள் உரிமைகள் கழக மாநில தலைமை ஒருங்கிணைப்பாளர் விடியல் கு கருணாநிதி மற்றும் உரிமை முரசு மாத இதழ் பொறுப்பாசிரியர் ஜி ராஜபாண்டியன் சிறப்புரையாற்றினார்கள். மேனாள் மாவட்ட நீதிபதியும் மக்கள் உரிமைகள் கழக சட்டப்பேரவை பிரிவின் மாநில ஆலோசகரான பி கணேசன் மற்றும் அன்ஷா மழலையர் பள்ளி குழுமம் மற்றும் கல்வி அறக்கட்டளையின் நிறுவனரும் முதல்வருமான ஷகிலா ஹூசைன் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். மக்கள் உரிமைகள் கழக மாநில துணைச் செயலாளர் ஆர் சுதாகர் மாநில மகளிர் அணி தலைவி நாகவேணி பாலமுருகன் மாநில போக்குவரத்து பிரிவு செயலாளர் அந்தோணி ஜேம்ஸ் உள்ளிட்ட ஏராளமான மாநில மற்றும் மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.

# க்ரோமா, ஆண்டு நிறைவை கொண்டாடும் வகையில் மாபெரும் விற்பனை கொண்டாட்டமாக 'ஃபெஸ்டிவல் ஆஃப் ட்ரீம்ஸ்' மூலம் வீட்டு உபயோகப் பொருட்கள், ஸ்மார்ட்ஃபோன்கள், லேப்டாப் மற்றும் பல சாதனங்களுக்கு அற்புதமான சலுகைகள் மற்றும் தள்ளுபடிகள் வழங்குகிறது

சென்னை, டிசம்பர் 24 2022: க்ரோமா அறிமுகப்படுத்தி இருக்கும் 'ஃபெஸ்டிவல் ஆஃப் ட்ரீம்ஸ்', புத்தாண்டு விற்பனைச் சலுகையுடன் உங்கள் ஆண்டை சிறப்பாக நிறைவு செய்யுங்கள். டாடா குழுமத்தின் அங்கமான க்ரோமா எலக்ட்ரானிக்ஸ் சில்லறை விற்பனையில் இந்தியாவின் முதல் மற்றும் நம்பகமான, பன்முக வழியில் (ஆம்னிசேனல்), செயல்பட்டு வரும் நிறுவனமாகும்.. க்ரோமா வாடிக்கையாளர்களின் ஷாப்பிங் கனவுகளை ஒரே தளத்தில் நனவாக்குகிறது. தற்போது க்ரோமா லேடாப்கள், மொபைல் போன்கள், வீட்டு உபயோகப் பொருட்கள், தொலைக்காட்சிகள் மற்றும் பல வகை சாதனங்கள், வாடிக்கையாளர்களால் அதிகம் விருப்பப்படும் கேஜெட்கள் மற்றும் உபகரணங்களின் மீது அட்டகாசமான சலுகைகளை வழங்குகிறது.. க்ரோமா விற்பனை நிலையங்களிலும், க்ரோமாவின் அதிகாரப்பூர்வமான இணையதளமான croma.com <http://croma.com> -லும் ஜனவரி 2, 2023 வரை இந்த மாபெரும் சலுகை விற்பனை நடைபெறுகிறது. விடுமுறை மற்றும் பண்டிகைக் காலத்தை சிறப்பாக்கும் வகையில் இந்தச் சலுகை வழங்கப்படுகிறது.

கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு என்பது மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் நிகழ்வுகளாக, மக்களால் அதிகம் கொண்டாடப்படும் விழாக்கள் ஆக முக்கியத்துவம் பெற்றிருக்கின்றன. 'சீக்ரெட் சாண்டா' விளையாடுவது முதல் அன்பானவர்களுக்கு அவர்கள் நீண்டகாலமாக வாங்க விரும்பும் பரிசுகளை வாங்குவது வரை பல கொண்டாட்டங்களைக் கொண்டது இந்தப் பண்டிகைகள். இதில் மதிப்புமிக்க வாடிக்கையாளர்களின் விடுமுறை ஆசைகள் அனைத்தும் நிறைவேறும் வகையில் க்ரோமா வழங்கும் அட்டகாசமான தள்ளுபடிகள் அமைந்துள்ளன. மேலும், க்ரோமா தள்ளுபடிச் சலுகைகளுக்கென பிரத்தியேகமான 3 விதமான பேண்ட்களை அறிமுகப்படுத்துகிறது. க்ரோமா வாடிக்கையாளர்கள் விற்பனை நிலையங்களில் சாதனங்களை வாங்கும்போது சிவப்பு பேண்ட் மீது 10 சதவீத தள்ளுபடியும் பச்சை பேண்ட்-டில் 5 சதவீதமும் மற்றும் வெள்ளை பேண்ட்-டில் 3 சதவீத தள்ளுபடியும் வழங்கப்படுகிறது. டிசம்பர் 24 முதல் டிசம்பர் 25 வரை மற்றும் டிசம்பர் 31 முதல் ஜனவரி 1, 2023 வரை இரண்டு கட்டங்களாக விற்பனை நிலையங்களில் மட்டுமே லக்கி டிரா பேண்ட்-களை மீட்டெடுக்க முடியும்.

க்ரோமா, இந்த ஆண்டின் நிறைவைக் கொண்டாடும் வகையில் ஏராளமான சலுகைகளை வழங்குகிறது. அன்பானவர்களுக்கு ஸ்மார்ட் ஃபோன் வாங்கிக் கொடுக்க அல்லது பரிசளிக்க விரும்புவோருக்கு, 5ஜி ஸ்மார்ட்போன்கள் ரூ. 12,999 என்ற விலையில் தொடங்குகிறது. அதோடு மட்டுமல்லாமல், தேர்ந்தெடுக்கப்பட்ட பிராண்டுகளுக்கு க்ரோமா, ரூ. 4,999 மதிப்பிலான ஸ்மார்ட் கடிகாரத்தை இலவசமாக வழங்குவதால் கூடுதல் சலுகையும் காத்திருக்கிறது. மேம்படுத்தப்பட்ட அனுபவத்தை எதிர்பார்க்கும் கேமிங் நபர்களுக்கு, 12-வது தலைமுறை இன்டெல்(ஆர்) கேமிங் லேப்டாப்கள் வெறும் 54,990 ரூபாயில் தொடங்குகின்றன. அதே சமயம் குறைந்த விலை லேப்டாப்பைத் தேடுபவர்களுக்கு இன்டெல் (ஆர்) கோர்(டிஎம்) ஐ3 ரூ. 34990 என்ற விலையில் தொடங்குகிறது.

குளிர்சாதனப் பெட்டிகள், வாஷிங் மெஷின்கள், ஸ்மார்ட்போன்கள், இயர்போன்கள், தொலைக்காட்சிகள், வீட்டு உபயோகப் பொருட்கள் மற்றும் பலவற்றை, நம்பமுடியாத தள்ளுபடி விலையில், சிறப்பாகத் தேர்வு செய்யப்பட்ட பண்டிகைக் காலச் சலுகைகள் மூலம் வாடிக்கையாளர்களுக்கு க்ரோமா வழங்குகிறது. இதன் மூலம் வாடிக்கையாளர்கள் தங்கள் வீடுகளை புதுப்பிக்கும் முயற்சிகளுக்கு ஆதரவுக்கரம் நீட்ட க்ரோமா தயாராக உள்ளது. 4கே யுஹெச்டி டிவிகள் வெறும் ரூ. 990 என்ற மாதாந்திர தவணைத் தொகை செலுத்தினால் போதும் என்ற அசத்தலான விலையில் தொடங்குகின்றன. எல்ஜி ஓஎல்இடி டிவிகள் மாதத்திற்கு வெறும் ரூ.2990 என்ற தவணைத் தொகை விலையில் தொடங்குகின்றன. முழு தானியங்கி வாஷிங் மெஷின்கள் ரூ. 20,990 என்ற விலையில் தொடங்குகின்றன. அத்துடன் 1.5-டன் 3 ஸ்டார் இன்வெர்ட்டர் ஸ்பிளிட் ஏசி வெறும் ரூ. 34,990 என்ற தொடக்க விலையில் கிடைக்கிறது. இவற்றின் மூலம் ஒரு முழுமையான வீட்டு உபயோக சாதனங்களின் ஷாப்பிங் அனுபவம் வாடிக்கையாளர்களுக்குக் காத்திருக்கிறது.

புத்தாண்டின் உற்சாகத்தைக் கொண்டாடும் வகையில், க்ரோமா தமது இணையதளத்தின் மூலம் வாங்கப்படும் ஏஎம்டி கேமிங் லேப்டாப்களுக்கு 40 சதவீதம் வரை தள்ளுபடியையும் மற்றும் ரூ. 5,000 வரை கேஷ்பேக் (பணம் திரும்பப் பெறுதல்) சலுகையையும் வழங்குகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட ஏஎம்டி ரைசன் லேப்டாப்களை வாங்கும் போது, 14,000 ரூபாய் வரை மதிப்புள்ள மானிட்டர்கள் மற்றும் கம்ப்யூட்டர் பயன்பாடுகளுக்கு உதவும் இதர கருவிகள் போன்ற பொருட்களை தங்களது தேவைக்கேற்ப இலவசங்களாக விற்பனை நிலையங்களில் வழங்கப்படுகின்றன.

வாடிக்கையாளர்களின் கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு விருந்துக் கொண்டாட்டங்களை மனதில் கொண்டு, க்ரோமா வெறும் ரூ. 2199 முதல் பார்ட்டி ஸ்பீக்கர்களை வழங்குகிறது. மேலும் சவுண்ட் பார்-களுக்கு 80 சதவீதம் வரை தள்ளுபடி வழங்கப்படுகிது. மொத்தத்தில், க்ரோமா தமது அனைத்து மதிப்புமிக்க வாடிக்கையாளர்களுக்கும் விடுமுறைக் காலம் மற்றும் ஆண்டு நிறைவை மறக்கமுடியாத ஒன்றாக மாற்ற அனைத்து முயற்சிகளையும் மிகச்சரியாக மேற்கொள்கிறது.

croma.com <http://croma.com> என்ற இணையதளத்தில் சிறந்த சலுகைகள் மற்றும் தள்ளுபடிகளைப் பார்த்துத் தெரிந்து கொள்ளவும். அல்லது அருகில் உள்ள விற்பனை நிலையத்துக்குச் சென்று ஆண்டு நிறைவு விற்பனை தொடர்பான சிறந்த சலுகைகள் பற்றித் தெரிந்து கொள்ளலாம்.

* அனைத்து சலுகைகளும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

# செலிபி இந்தியா, சென்னை சர்வதேச விமான நிலையத்தில் தரை கையாளுதல் ஒப்பந்தத்தைப் பெற்றுள்ளது

சென்னை, டிசம்பர் 24 2022: செலிபி இந்தியா இன்று தனது நியமனத்தை தான் ஏற்றுக்கொண்டதை சென்னையிலுள்ள ஏர்போர்ட் அதாரிட்டி ஆப் இந்தியாவின் விமான நிலைய இயக்குநரிடம் சமர்ப்பித்து, சேவைகளைத் தொடங்குவதற்கான தேவைகளை பூர்த்தி செய்யத் தொடங்கியுள்ளதாக அறிவித்துள்ளது. உள்நாட்டு மற்றும் சர்வதேச டெர்மினல்களில் அட்டவணையிடப்பட்ட மற்றும் அட்டவணையிடப்படாத விமான நிறுவனங்களுக்கு, செலிபி, முழுமையான தரை கையாளுதல் ஆதரவை வழங்கும்.

செலிபி இந்தியா வின் சீஃப் எக்ஸ்க்யூட்டிவ் ஆஃபீஸர் திரு. முரளி ராமச்சந்திரன் கூறுகையில், "இந்தியாவில் விமான நிறுவனங்களின் தேவைகள் மற்றும் வளர்ந்து வரும் விமானப் போக்குவரத்துத் துறையை யும் நாங்கள் புரிந்துகொள்கிறோம், மேலும் தற்போதைய மற்றும் எதிர்கால விமான மற்றும் பயணிகள் போக்குவரத்தைக் கையாளுவதற்கு நாங்கள் நன்கு தயாராக இருக்கிறோம். மிக விரைவில் எதிர்காலத்தில் கார்பன் நியூட்ரல் ஆக விமானப் போக்குவரத்துத் துறையின் பெரிய நோக்கத்தை அடைவதற்காக, சென்னை விமான நிலையத்தில் மிகவும் எதிர்பார்க்கப்படும் உயர்தர தரைக் கையாளுதல் சேவைகளை வழங்கி நிலையான சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குவோம்."என்று கூறினார்.

மும்பை, டெல்லி, பெங்களூரு, ஹைதராபாத், கொச்சின், அகமதாபாத், கோவா (மனோகர் சர்வதேச விமான நிலையம், மோபா) மற்றும் கண்ணூருக்குப் பிறகு செலிபி க்கான இந்தியாவின் 9வது விமான நிலையம், சென்னை ஆகும். சமீபத்தில், செலிபி, பெங்களூரு விமான நிலையத்திற்கான பிரிட்ஜ்-மவுண்டட் உபகரண சேவைகள் ஒப்பந்தத்தை வென்றது மற்றும் டெல்லி சர்வதேச விமான நிலையத்தில் பயணிகள் போக்குவரத்திற்காக 100% மின்சார, குளிரூட்டப்பட்ட, ஓடுபாதை வாகனங்களை அறிமுகப்படுத்தியது.